# ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

**25.03.2018**

## முன்னுரை

அன்பான இறைமக்களே, இன்றைய ஞாயிறு 'குருத்து ஞாயிறு எனவும், பாடுகளின் ஞாயிறு எனவும் அழைக்கப்படுகிறது. மாட்சி, பாடுகள் என்ற இரு முக்கியமான நிகழ்வுகள் ஒரே தளத்தில் பயணிக்கின்றன. குருத்தோலை மகிழ்ச்சியின் அடையாளம். பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் தாமே கூடாரப் பெருவிழாவில், ஓலை மற்றும் தளிர்களையும், இலைகளையும் கொண்டுவந்து ஆண்டவர் திருமுன் மகிழ்ந்திருக்குமாறு மக்களைப் பணிக்கிறார் (லேவி. 23:40). மக்கபேயர் காலத்தில் மீட்கப்பட்டு விழா கொண்டாடப்பட்ட நாளில் அவர்கள் கைகளில் குருத்தோலைகளை ஏந்தி திருவிழாவை மகிழ்வோடு கொண்டாடினர் (2மக்.10: 6-8). இவ்வாறு குருத்தோலைப் பவனி நமக்கு இயேசுவின் மாட்சியை வெளிப்படுத்துகிறது. ஓசான்னாகீதம் வெற்றியின் முழக்கமாக அமைந்தாலும் ஆலயத்தை அடைந்தவுடன் நாம் இயேசுவின் பாடுகளைப்பற்றி தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

நம்மைப்போல மனித உருவில் வந்த இயேசு தனது கடவுள் தன்மையில் இவ்வலகை மீட்காமல் சாதாரண மனிதனாகத் தம் தந்தைக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்தி சிலுவை பலியை ஏற்கிறார். இதனால் இவரை விண்ணவரும் மண்ணவரும் இயேசு கிறிஸ்து ஆண்டவர் என அறிக்கையிடுவர் எனக்கூறி இயேசுவோடு வாழ இரண்டாம் வாசகம் வழியாக புனித பவுல் நம்மை அழைக்கிறார். இயேசு எருசலேமிற்குள் நுழைந்தபோது மிகப்பெரிய மக்கள் கூட்டம் அவரை வரவேற்கத் துடித்தது. அக்கூட்டத்தில் பரிசேயர்கள், திருவிழாவோடு வந்தவர்கள் அனைவரும் 'ஓசான்னா, தாவீது அரசரின் மகன் வாழ்க" என்று கூக்குரலிட்டனர். ஓசான்னா புகழ்ச்சியானது 'சிலுவையில் அறையும்" என மாறுவதை இயேசு அறிவார். மேலும் பனை ஓலை வாளாகவும், அரசு கீரிடம் முள்முடியாகவும், வழியில் விரிக்கப்பட்ட ஆடைகள் பெரிய வெள்ளியன்று வெறுமையாக்கப்படும் தன் உடலாகவும் மாறுவதை இயேசு அறிந்திருந்தார். இரண்டு மாபெரும் உண்மைகளை மக்களுக்கு எடுத்துரைக்க இயேசு இன்று எருசலேமுக்குள் நுழைகிறார். முதன்மையாக கடவுள் இந்த உலகத்தை எவ்வளவு நேசிக்கிறார் என்பதைத் தம் மரணத்தின் வழியாக இவ்வுலகிற்குப் போதிக்க விரும்பினார்.

இரண்டாவதாக, 'தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியாது" (லூக். 23:21) என்ற வார்த்தைகள் வழியாக-

யூதாஸ் தன்னைக் காட்டிக்கொடுக்கப் போவதும், பேதுரு தன்னை மறுதலிக்கப்போவதும், சீடர்கள் தன்னைவிட்டு ஓடிப்போவர் என்பதும் தெரிந்திருந்தும் இயேசு அவர்கள்மேல் கொண்டுள்ள அளவிடமுடியாத அன்பை வெளிப்படுத்துகிறது. நமது மீட்பின் பெருநிகழ்ச்சிகள் நிறைவேறிய புனித வாரத்தை இன்று நாம் துவங்குகின்றோம். இன்றைய இறைவார்த்தைகளும், கல்வாரி காட்சிகளும் இயேசுவின் பொறுமை, அன்பு, கீழ்ப்படிதல், தாழ்ச்சி போன்றவைகளை நமக்குக் கற்பிக்கின்றன. ஆண்டவர் இயேசுவின் பாடுகளில் பங்கேற்று இன்றைய ஆரவாரத்திற்குள் மறைந்திருக்கும் அர்த்தத்தைக் கண்டுணர்ந்து நமது ஆன்மீக வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்ற திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல தந்தையே இறைவா, திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திருச்சபையின் மக்களை நல்வழியில் நடத்திட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, நாட்டிலும், சமுதாயத்திலும், குடும்பங்களிலும் இன்றைய நாட்களில் ஏற்பட்டுள்ள பிளவுகள், மனவருத்தங்கள், பிரிவினைகள் இவைகளை நீக்கி அன்பு, பாசம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை எல்லாச் சூழ்நிலைகளிலும் அயலாரை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் போன்ற பண்புகளைக் கொண்டு வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பே உருவான இறைவா, புனித வாரத்தைத் தொடங்கும் நாங்கள் உம்முடைய பாடுகள், சிலுவை மரணம் வெறும் நிகழ்வுகளாக இல்லாமல் இவைகளை உள்வாங்கி மனம் வருந்தி, மனந்திரும்ப எளிமையான உள்ளத்தைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. மன்னிக்கும் மன்னவனே இறைவா, இந்த புனித வாரத்தில் எங்களால் முடிந்தவரை உமது சிலுவைப் பயணத்தைத் தியானிக்கவும், ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று பாவங்களுக்காகப் பரிகாரம் செய்யவும் இந்த தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக்க செயல்படுத்த வரமருள உம்மை மன்றாடுகிறோம்.